சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 30.08.2019

# சாதாரணக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, விகாரி வருடம் ஆவணி மாதம் 13–ம் நாள் (ஆகஸ்ட் திங்கள் 30–ம் நாள்:– 30.08.2019) வெள்ளிக் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

## பொருள் எண்.01

இந்நகராட்சிக்குச் சொந்தமான பழைய நகராட்சி அலுவலக கட்டிடத்தில் கட்டப்பட்ட மெயின் ரோட்டில் அமைந்துள்ள IDSMT கடை எண்.1–ஐ திரு.A.கருப்பையா பெயரில் உள்ளது. திரு.A.கருப்பையா என்பவர் உடல்நிலை மற்றும் குடும்ப சூழ்நிலை காரணமாக தொடர்ந்து கடையினை நடத்த முடியாத காரணத்தினால் அவரது பங்குத்தாரர் திரு.S.அப்துல் ரசீத் பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண்.3198/2019/அ2)

**தீர்மான எண், நாள்** 680, நாள்.30.08.2019

**தீர்மானம்** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.02

இந்நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகன எண்.TN60S3761க்கு (குடிநீர் லாரி) 2018–2019ம் ஆண்டுக்கான தகுதிச் சான்று 29.09.2019ம் தேதியுடன் முடிவடைவதால் 2019–2020க்கு தகுதிச் சான்று (FC) புதுப்பிக்கும் பொருட்டு, சில மராமத்து பணிகளை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினைத் தொகை ரூ.57000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம். (ந.க.எண்.0324/2014/இ2)

**தீர்மான எண், நாள்** 681, நாள்.30.08.2019

**தீர்மானம்** அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.03

தமிழ்நாடு ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கட்டிட விதிகள் 2019–ன்படி நகராட்சிப் பகுதிகள் கட்டுப்பட்டு வரும் அனைத்து கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு கட்டாயம் உருவாக்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி சின்னமனூர் நகராட்சிப் பகுதிகளில் கட்டப்படும் அனைத்து கட்டிடங்களுக்கும் கட்டிட அனுமதி கோரி கட்டிட விண்ணப்பங்களுக்கு 01.09.2019 ஆம் தேதி முதல் மழைநீர்த சேகரிப்பு கட்டமைப்புக்கான வைப்புத் தொகை கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்து வசூல் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. <u>குடியிருப்பு கட்டிடம் கட்டண விவரம்</u>
   அ). 1000 சதுர அடி வரை – ரூ.5000/–
   ஆ). 1001 முதல் 2500 சதுரடி வரை – ரூ.7500/–
   இ). 2500 சதுரடிக்கு மேல் – ரூ.10000/–
2. <u>குடியிருப்பு இல்லாத கட்டிடம்</u>
   அ). 1000 சதுர அடி வரை – ரூ.10000/–
   ஆ). 1001 சதுர அடி முதல் 2000 சதுரடி வரை – ரூ.15000/–
   இ). 2000 சதுர அடிக்கு மேல் – ரூ.20000/–

| | | |
|---|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | 1. | மேற்காணும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புக்கான வைப்புத் தொகையினை 01.09.2019 ஆம் தேதி முதல் நடைமுறைப்படுத்திட மன்றம் அனுமதிக்கலாம். |
| | 2. | கட்டிட உரிமையாளர்களால் உரிய முறையில் மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைத்து உரிய புகைப்படம் சமர்ப்பிக்கும் பட்சத்தில் உரிய நேராய்வு செய்து மழைநீர் சேகரிப்பு தொட்டி திருப்தி அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டிருப்பின் வைப்புத் தொகையினை மனுதாரருக்கு வழஙகுவதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.0775/2019/எப்1) |

தீர்மான எண், நாள் 682, நாள்.30.08.2019

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.04

இந்நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் எண்.TN60Z5198க்கு சில மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.30000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.

தீர்மான எண், நாள் 683, நாள்.30.08.2019

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.05

இந்நகராட்சியின் பயன்பாட்டிலுள்ள ஈப்பு வாகனம் எண்.TN60Z5198க்கு சில மராமத்து பணிகள் 22.07.2019ம் தேதிய வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை |
|---|---|---|
| 1. | AMN Motors, கம்பம் | ரூ.29850/– |
| 2. | பரமசிவம் ஆட்டோ கேரேஜ், கம்பம் | ரூ.33850/– |

அலுவலகக் குறிப்பு:– 1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

தீர்மான எண், நாள் 684, நாள்.30.08.2019

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.06

இந்நகராட்சியில் பொறியியல் பிரிவு, நகரமைப்புப் பிரிவு மற்றும் மேலாளர் அறை ஆகிய இடஙகளில் கணினி பயன்படுத்தப்பட்டு வருவதால் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ள குளிர்சாதனம் (Air Conditioner) பொருத்த ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.65 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:– 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.2350/2019/இ1)

தீர்மான எண், நாள் 685, நாள்.30.08.2019

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

## பொருள் எண்.07

இந்நகராட்சியின் விஸ்வன்குளம் பகுதியில் நகராட்சிக்குச் சொந்தமான ஊரணியை ஆக்கிரமித்து வீடு கட்டப்பட்டுள்ளது குறித்து சென்னை உயர்நீதிமன்ற வழக்கு நடைபெற்று வந்த நிலையில் அவ்வழக்கின் தீர்ப்பானது 07.03.2019ம் தேதியன்று கிடைக்கப்பெற்றதில், உரிய ஆக்கிரமிப்புகளை அகற்ற அறிவிப்புகள் செய்யப்பட்டது. அவ்வறிப்பினை எதிர்த்து மனுதாரர்களால் மீண்டும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் WP(MD) No.14044 of 2019 முதல் 14047 of 2019 வரை உள்ள வழக்கு எண்ணின்படி வழக்கு தொடரப்பட்டது. வழக்கானது விசாரணைக்கு வரப்பட்டு உரிய உத்திரவானது சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் இருந்து 12.07.2019 ஆம் தேதியன்று கிடைக்கப்பெற்றுள்ளது. மேற்காணும் வழக்கில் நகராட்சியின் சார்பாக ஆஜராகி வழக்காடியதற்கான வழக்கறிஞர் கட்டணம் ரூ.38000/–க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியின் கீழ் மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.87/2016/எப்) |
| **தீர்மான எண், நாள்** | **686, நாள்.30.08.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

## பொருள் எண்.08

தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 09.07.2019ம் தேதிய ந.க.50/அ/2019/மா.தி.ந எண்ணிட்ட கடிதத்தின்படி மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக சின்னமனூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுக் கழிப்பிடங்களில் மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பு கழிப்பிடம் வசதி செய்ய, மேற்படி கழிப்பிடங்களில் சாய்வு தளம், Hand Rails மற்றும் European Type Water Closet போன்ற அமைப்புகள் ஏற்படுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்காணும் பணி செய்ய ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.4.70 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| அலுவலகக் குறிப்பு:– | 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்காணும் செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>3. தேனி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 09.07.2019ம் தேதிய ந.க.50/அ/2019/மா.தி.ந கடிதத்தின்படி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3017/2019/இ1). |
| **தீர்மான எண், நாள்** | **687, நாள்.30.08.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.09**

இந்நகராட்சியில் திட்டப்பணிகள் மற்றும் பிற பணிகள் நடைபெறும் போது ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பிடித்தம் செய்யப்படும் வருமானவரியினை இருசால் செய்ய (E-Filling) 2019–2020ம் நிதியாண்டிற்கு தொகை ரூ.20000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையாளரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.3874/2003/இ1)**

**தீர்மான எண், நாள்** **688, நாள்.30.08.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******